RESEARCH ARTICLE
INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
DOI: 10.34256/irjt2533
OPEN ACCESS

# பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்ற குறளின் கருத்து

**ந. தட்சணாமூர்த்தி** [அ, *]

[அ] அஞ்சல்துறை கணக்கு அதிகாரி (ஓய்வு), பட்டுக்கோட்டை - 614602, இந்தியா

# An Interpretation of the Kural 'All Living Beings Are Equal by Birth

**N. Dakshinamoorthy** [a, *]

[a] Retired Accounts Officer, Department of Posts of India, Pattukkottai-614602, India

* Corresponding Author: ndmoorthy30@gmail.com

**ABSTRACT**

Tirukkural, one of the most celebrated classics of Tamil literature, is frequently quoted by scholars and the general public alike. Among its most widely cited verses is the celebrated line, "Pirappokkum Ella Uyirkkum" ("All living beings are equal by birth"). In contemporary discourse, this line has become a popular slogan, often interpreted to mean that all human beings are born equal and that no one possesses superiority or inferiority by birth. It is also commonly argued that Thiruvalluvar expressed this view in opposition to the Vedic concept of social hierarchy based on the four varnas, while others regard it as an expression of a distinctly Tamil ideological perspective opposed to Aryan social thought. However, the question remains whether this interpretation truly reflects Thiruvalluvar's intended meaning and whether the couplet itself conveys such an idea. A careful textual and contextual analysis is therefore necessary to understand the philosophical significance of this verse. This article critically examines the meaning of the Kural "Pirappokkum Ella Uyirkkum", exploring its linguistic, literary, and ethical dimensions in order to arrive at a more accurate interpretation of Thiruvalluvar's thought.

**Keywords:** Thiruvalluvar, Tirukkural, Thiruvalluvar View, Pirappokkum Ella Uyirkkum

## முன்னுரை

உலகம் போற்றும் திருக்குறளை மேற்கோள் காட்டி கற்றோரும் மற்றோரும் பேசுவது தமிழ் உலகத்தில் பெருவழக்கம். அத்தகைய மேற்கோள்களில் ஒன்று, 'பிறப்பொக்கும் எல்லா உயிர்களுக்கும் என்பது. தற்காலத்தில் இது ஒரு முழக்கமாகவே உள்ளது எனலாம். இதைக் கூறும் பலர் அதன் மூலம் கூற விரும்பும் கருத்து என்னவென்றால், 'எல்லாக் குழந்தைகளும் ஒரே தன்மையுடன் பிறக்கின்றன என்று வள்ளுவர் கூறுகிறார். எனவே பிறப்பால் எந்த உயர்வு, தாழ்வும் கிடையாது' என்பதுதான். நால்வருணங்களுள் பிறந்த பிறப்பைப் கொண்டு உயர்வு தாழ்வு கூறும் வைதிகத்துக்கு எதிராக வள்ளுவர் இவ்வாறு கூறுகிறார் என்று சிலர் கூறுவர். வள்ளுவர் கூறுவது ஆரியத்துக்கு எதிரான தமிழர் கருத்து என்றும் சிலர் கூறுவர். உண்மையில் வள்ளுவரின் கருத்து அதுவா, அக்குறள் இத்தகைய பொருள் கொண்டதா என்பது ஆராய்ச்சிக்கு உரியது.

## பட்டறிவின்படி பிறப்பின் தன்மை

பிறக்கும் குழந்தைகளுள் ஒன்றுக்கொன்று உருவம், குணங்கள் போன்றவற்றில் பற்பல வேறுபாடுகள் இருப்பதை அன்றாட வாழ்வில் நாம் காண்கிறோம். ஒரு குழந்தை போல் இன்னொரு குழந்தை இருப்பதில்லை. ஒரு குழந்தை சிவப்பாக இருக்கிறது. வேறு ஒரு குழந்தை கருப்பாக இருக்கிறது. ஒரு குழந்தை அழகாக இருக்கிறது. வேறு ஒரு குழந்தை அழகற்று உள்ளது. ஒரு குழந்தை உறுதியான உடற்கட்டுடன் உள்ளது. வேறு ஒரு குழந்தை வலுவற்று உள்ளது. ஒரு குழந்தை அமைதியாக, பொறுமையாக சிரித்த முகத்துடன் இருக்கிறது. வேறு ஒரு குழந்தை எப்போதும்

அழுதபடி, தொல்லை தந்தபடி உள்ளது. ஒரு குழந்தை மிகுந்த அறிவுக்கூர்மையுடன் உள்ளது. வேறு ஒரு குழந்தை அறிவுக்கூர்மை குன்றி உள்ளது. இவ்வாறாக, பிறக்கும் குழந்தைகளின் தன்மைகளில் வேறுபாடு இருப்பதையும் சில குழந்தைகள் தன்மைகளில் உயர்ந்திருப்பதையும் சில குழந்தைகள் தன்மைகளில் தாழ்ந்திருப்பதையும் நாம் கண்கூடாகக் காண்கிறோம். இந்தத் தன்மைகள் எங்கிருந்து வருகின்றன என்பது நன்கு அறியப்பட்ட ஒன்று. இந்தத் தன்மைகள் பெற்றோரிடம் இருந்தோ அவர்களின் முன்னோரிடம் இருந்தோதான் வருகின்றன என்பதை நாம் அறிவோம். அப்பா போலவே இருக்கும் குழந்தைகளையும் அம்மா போலவே இருக்கும் குழந்தைகளையும் தாத்தா, பாட்டி போலவே இருக்கும் குழந்தைகளையும் நாம் அனைவரும் பார்த்திருப்போம். மனிதர்கள் மட்டுமல்ல விலங்குகள், தாவரங்கள் முதலியவையும் இத்தன்மையைக் கொண்டுள்ளன. பழங்களில் ஒன்று வாழைப்பழம். ஆனால் அது பல வகைகளைக் கொண்டுள்ளது. கற்பூரவல்லி மரத்தின் பழம் கற்பூரவல்லியாகத்தான் இருக்கும்; பூவன் பழமாக இருக்காது. குரங்கு என்ற ஒரே விலங்கினத்தில் பல வகைகள் உள்ளன. செம்முகக் குரங்கின் குட்டி செம்முகக் குரங்காகவே இருக்கும்; கருங்குரங்காக இராது. விதைகள் தரமாக இருந்தால்தான் விளையும் தானியம் தரமாக இருக்கும், விதைகள் தரமின்றி இருந்தால் விளையும் தானியமும் தரமற்று இருக்கும் என்பது உழவன் அறிந்தது. ஆனால் பொதுவான இத்தன்மைக்கு மாறுபாடுகளும் உண்டு. பெற்றோருக்கு முற்றிலும் மாறுபட்ட குழந்தைகளையும் காண்கிறோம். இது ஏன் என்பதை மரபியல் (Genetics) விளக்குகிறது.

## மரபியல் என்ற அறிவியல் துறை

அறிவியலறிஞர் கிரிகோர் மெண்டல் என்பவரால் உருவாகிய துறை மரபியல். இத்துறை தற்காலத்தில் பெரிதும் வளர்ந்துள்ளது. தாய், தந்தையரிடம் இருந்து குழந்தையின் பண்புகள் வருவதையும், முன்னோரின் பண்புகள் தாய், தந்தையர் மூலம் கடத்தப்படுவதையும், இவ்வாறு தன்மைகளைக் கடத்தும் மரபணு பற்றியும் மரபியல் விளக்குகிறது. தாய், தந்தைக்கு மாறுபட்ட தன்மை கொண்ட ஒரு முன்னோரது தன்மை மரபணு மூலம் குழந்தைக்கு வந்து அந்தக் குழந்தை தாய், தந்தைக்கு மாறுபட்ட தன்மையுடன் பிறக்கிறது. முன்னோரில் மிகுதியான கலப்பு இருந்தால் பிறக்கும் குழந்தைகளில் மிகுதியான வேறுபாடுகள் இருக்கும். அப்படி இல்லாவிட்டால் குழந்தைகளிடம் வேறுபாடுகள் மிகுதியாக இரா. எடுத்துக்காட்டாக, ஐரோப்பிய நாட்டினருக்கு கருப்பினத்தவரோடு கலப்பு அரிது என்பதால் அங்கு பிறக்கும் குழந்தைகள் வெள்ளையாகவே இருக்கும். கருப்பாக இரா. நம் நாட்டில் கலப்பு மிகுதி என்பதால் கலந்த நிறங்களில் குழந்தைகள் பிறக்கும். தொடர்ந்து வரும் முன்னோர் உறவை குலம், குடி என்ற சொற்கள் குறிப்பிடுகின்றன.

## பிறப்பு பற்றி வள்ளுவரின் கருத்து

இவ்வாறாக, பிறக்கும் குழந்தைகளின் தன்மைகளில் பல மாறுபாடுகள் உண்டு என்பதும் அவற்றின் அடிப்படையில் உயர்வு, தாழ்வு உண்டு என்பதும் அன்றாட வாழ்வின் பட்டறிவாலும் மரபியல் என்ற அறிவியலாலும் உறுதியாக அறியப்பட்ட உண்மைகள். அப்படி இருக்கும்போது வள்ளுவர் வெளிப்படையாக அறியப்படும் உண்மைக்கு முரணாக ஒரு கருத்தைச் சொல்வாரா என்ற கேள்வி எழுகிறது. வள்ளுவரின் கருத்து என்ன என்பதைத் திருக்குறளில் உள்ள வேறு சில குறள்கள் தெளிவாகக் காட்டுகின்றன.

வள்ளுவர் குடிமை (அதி. 96) என்ற அதிகாரத்தின் குறள்களில் பிறப்பின் அடிப்படையிலேயே தன்மைகள் அமைவதைத் தெளிவாகக் கூறியுள்ளார். அந்த அதிகாரத்தின் சில குறள்களையும் அவற்றுக்கு மு. வரதராசனார் அவர்களின் உரையையும் கீழே காணலாம்:

“இற்பிறந்தார் கண்அல்லது இல்லை இயல்பாகச்

செப்பமும் நாணும் ஒருங்கு” (குறள். 951)

உரை: நடுவு நிலைமையும் நாணமும் உயர்குடியில் பிறந்தவரிடத்தில் அல்லாமல் மற்றவரிடத்தில் இயல்பாக ஒருசேர அமைவதில்லை.

“ஒழுக்கமும் வாய்மையும் நாணும்இம் மூன்றும்

இழுக்கார் குடிப்பிறந் தார்” (குறள். 952)

உரை: உயர்குடியில் பிறந்தவர் ஒழுக்கமும் வாய்மையும் நாணமும் ஆகிய இம் மூன்றிலிருந்தும் வழுவாமல் இயல்பாகவே நன்னெறியில் வாழ்வர்.

“நகைஈகை இன்சொல் இகழாமை நான்கும்

வகைஎன்ப வாய்மைக் குடிக்கு” (குறள். 953)

உரை: உண்மையான உயர்குடியில் பிறந்தவர்க்கு முக மலர்ச்சி, ஈகை, இனிய சொல், பிறரை இகழ்ந்து கூறாமை ஆகிய நான்கும் நல்ல பண்புகள் என்பர்.

"அடுக்கிய கோடி பெறினும் குடிப்பிறந்தார்

குன்றுவ செய்தல் இலர்" (குறள். 954)

உரை: பல கோடிப் பொருளைப் பெறுவதாக இருந்தாலும் உயர்குடியில் பிறந்தவர் தம் குடியின் சிறப்புக் குன்றுவதற்குக் காரணமான குற்றங்களைச் செய்வதில்லை.

"நலத்தின்கண் நாரின்மை தோன்றின் அவனைக்

குலத்தின்கண் ஐயப் படும்" (குறள் - 958)

உரை: ஒருவனுடைய நல்ல பண்புகளுக்கிடையில் அன்பற்ற (கொடுமையான) தன்மை காணப்பட்டால், அவனை அவனுடைய குடிப்பிறப்புப் பற்றி ஐயப்பட நேரும்.

"நிலத்தில் கிடந்தமை கால்காட்டும் காட்டும்

குலத்தில் பிறந்தார்வாய்ச் சொல்" (குறள் - 959)

உரை: இன்ன நிலத்தில் இருந்து முளைத்தது என்பதை முளை காட்டும்; அதுபோல் குடியிற் பிறந்தவரின் வாய்ச்சொல் அவருடைய குடிப்பிறப்பைக் காட்டும்.

இன்னும் சில குறள்களில் இருந்தும் வள்ளுவரின் கருத்தை அறியலாம்.

"ஒழுக்கம் உடைமை குடிமை இழுக்கம்

இழிந்த பிறப்பாய் விடும்" (குறள் - 133)

உரை: ஒழுக்கம் உடையவராக வாழ்வதே உயர்ந்த குடிப் பிறப்பின் தன்மையாகும்; ஒழுக்கம் தவறுதல் இழிந்த குடிப் பிறப்பின் தன்மையாகிவிடும்.

"இற்பிறந்தார் கண்ணேயும் இன்மை இளிவந்த

சொற்பிறக்கும் சோர்வு தரும்" (குறள் - 1044)

உரை: வறுமை என்பது, நல்ல குடியிற் பிறந்தவரிடத்திலும் இழிவு தரும் சொல் பிறப்பதற்குக் காரணமான சோர்வை உண்டாக்கிவிடும்.

அரசன் பணிகளுக்கு ஆட்களைத் தேர்ந்தெடுக்கும்போது நல்ல குடியில் பிறந்து குற்றத் தன்மைகள் நீங்கி பழிச்சொல்லுக்கு நாணுபவனையே தேர்ந்தெடுக்க வேண்டும் என்று வள்ளுவர் பின்வரும் குறளில் கூறுகிறார்.

"குடிப்பிறந்து குற்றத்தின் நீங்கி வடுப்பரியும்

நாணுடையான் கட்டே தெளிவு"

(அதி - தெரிந்து தெளிதல். குறள். 502)

தூதனுக்கு இருக்க வேண்டிய பண்புகளை வள்ளுவர் கூறும்போது நல்ல குடியில் பிறத்தலைத் தேவையான ஒரு தகுதியாக இவ்வாறு கூறுகிறார்.

"அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் வேந்தவாம்

பண்புடைமை தூதுரைப்பான் பண்பு" (அதி - தூது. குறள் - 681)

நல்ல குடியில் பிறந்தவனாகவும் பழிக்கு நாணக்கூடிய தன்மை உடையவனாகவும் உள்ள ஒருவனைப் பொருள் கொடுத்தாவது நட்பு கொள்ள வேண்டும் என்று வள்ளுவர் கீழ்க்காணும் குறளில் கூறுகிறார்.

"குடிப்பிறந்து தன்கண் பழிநாணு வானைக்

கொடுத்தும் கொளல்வேண்டும் நட்பு" (அதி - நட்பாராய்தல். குறள். 794)

அன்புடையவராக இருத்தல், உயர்ந்த குடியில் பிறந்த தன்மை கொண்டிருத்தல் ஆகிய இரண்டும் பண்பு உடையவராக வாழ்வதற்கு அடிப்படையாகும் என்று வள்ளுவர் பின்வரும் குறளில் கூறுகிறார்.

"அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் இவ்விரண்டும்

பண்புடைமை என்னும் வழக்கு" (அதி - பண்புடைமை. குறள். 992)

கல்வியை விட ஒழுக்கம் சிறந்தது எனப் பொருள்பட வள்ளுவர் பின்வரும் குறளில் கூறுகிறார்.

“மறப்பினும் ஓத்துக் கொளலாகும் பார்ப்பான்

பிறப்பொழுக்கங் குன்றக் கெடும்” (குறள் 134)

இந்தக் குறளில், பார்ப்பான் வேதத்தை மறந்துவிட்டாலும் மீண்டும் ஓதிப் பெற்றுவிட முடியும். அவன் ஒழுக்கம் குன்றிவிட்டால் அவனது பிறப்பின் பெருமை கெட்டுவிடும் என்கிறார் வள்ளுவர். இதனால் பார்ப்பனப் பிறப்பு பெருமை உடையது என வள்ளுவர் கருதியது புலப்படும்.

தொல்காப்பியம், சங்க இலக்கியம், சிலப்பதிகாரம், மணிமேகலை முதலிய பழந்தமிழ் நூல்களில் அக்காலத் தமிழர் சமுதாயத்தில் நால்வருண முறை இருந்தது எனக் காட்டும் சான்றுகள் மிகப்பல உள்ளன. பார்ப்பனர் உயர்வாகக் கருதப்பட்டனர் என்பதற்கு எண்ணற்ற சான்றுகள் உள்ளன. இக்கட்டுரை ஆசிரியர் எழுதிய, 'சங்ககாலத் தமிழர் சமயம் - ஒரு மீளாய்வு என்ற கட்டுரையில் இது பற்றி விளக்கமாகக் காணலாம்1. பழந்தமிழர் கருதியவாறு வள்ளுவரும் பார்ப்பனப் பிறப்பை உயர்வாகக் கருதியுள்ளார்.

## பிறப்பைவிடத் தகுதி உயர்ந்தது

பிறப்பின் பெருமையை இத்தனை குறள்களில் கூறிய வள்ளுவர் பிறப்பு மட்டுமே உயர்ந்தது எனக் கருதவில்லை. ஒருவன் தாழ்ந்த குடியில் பிறந்து கல்வியில் சிறந்தவன் ஆகிறான் எனக் கொள்வோம்; இன்னொருவன் உயர்ந்த குடியில் பிறந்து கல்வி கற்கவில்லை எனக் கொள்வோம். இருவரில் தாழ்ந்த குடியில் பிறந்து கல்வி கற்றவனே உயர்ந்தவன் என்று வள்ளுவர் பின்வரும் குறளில் கூறுகிறார்:

“மேற்பிறந்தா ராயினும் கல்லாதார் கீழ்ப்பிறந்தும்

கற்றார் அனைத்திலர் பாடு” (குறள். 409)

உரை (மு.வ): கல்லாதவர் உயர்ந்த குடியில் பிறந்தவராக இருப்பினும் தாழ்ந்த குடியில் பிறந்திருந்தும் கல்வி கற்றவரைப் போன்ற பெருமை இல்லாதவரே.

சங்ககாலத் தமிழரும் இவ்வாறே கருதினர் என்பதை பாண்டியன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் பாடிய புறநானூற்றுப் பாடலின் பின்வரும் வரிகளால் அறியலாம்.

“வேற்றுமை தெரிந்த நாற்பா லுள்ளும்

கீழ்ப்பால் ஒருவன் கற்பின்

மேல்பால் ஒருவனும் அவன்கண் படுமே” (புற. 183:8-10)

வேறுபாடு தெரியப்பட்ட நாற்குலத்துள்ளும் கீழ்க்குலத்துள் ஒருவன் கற்பின் மேற்குலத்துள் ஒருவனும் இவன் கீழ்க்குலத்தானென்று பாராது கல்விப் பொருட்டு அவனிடத்தே சென்று வழிபடுவன் ஆதலான் என்றவாறு' என்பது ஔவை துரைசாமி அவர்களின் உரை.

எனவே பழந்தமிழர் பிறப்பின் அடிப்படையில் பெருமையைக் கருதினாலும் அதைவிடச் சிறந்ததாக அவனது கல்வி, ஒழுக்கம் முதலியவற்றையே கருதினர் என்பது புலனாகும். அவ்வாறே வள்ளுவரும் கல்வி, ஒழுக்கத்தை மிகவும் உயர்வாகக் கருதுகிறார். எனினும் பிறப்பின் அடிப்படையில் உயர்ந்த தாழ்ந்த தன்மைகள் அமைகின்றன என்பதைக் கொண்டு நல்ல குடியில் பிறப்பதை பெரும் சிறப்பாகப் பல குறள்களில் கூறியிருக்கிறார் என்பதை நாம் மேலே கண்டோம். அவ்வாறு இருக்கும்போது 'பிறப்பொக்கும்' என்ற குறளில் அவர் பிறப்பினால் எந்த வேற்றுமையும் இல்லை என்று எப்படிக் கூறியிருப்பார் என்பது கருதத் தக்கது.

'பிறப்பொக்கும்' என்ற குறள்:

பொதுவாக, 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்று கூறுபவர்கள் அக்குறளின் பின்பகுதியைக் கூறுவதில்லை.

“பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா

செய்தொழில் வேற்றுமை யான்” (குறள். 972)

என்ற குறளுக்கு மு.வ அவர்களின் உரை பின்வருமாறு. “எல்லா உயிர்க்கும் பிறப்பு ஒரு தன்மையானதே; ஆயினும் செய்கின்ற தொழில்களின் உயர்வு தாழ்வு வேறுபாடுகளால் சிறப்பியல்பு (பெருமை) ஒத்திருப்பதில்லை” . இது பரிமேலழகர் உரையை ஒட்டியது. இங்கு தொழில் என்பது செயல், வருவாய்த்தொழில் இரண்டையும் குறிக்கக் கூடியது. இக்குறள் 'பெருமை' என்ற அதிகாரத்தில்

அமைந்துள்ளது. இக்குறளின் நோக்கம் பெருமையைப் பற்றிக் கூறுவதே. பெருமையைப் பற்றிய கருத்துக்குத் துணையாகவே பிறப்பைப் பற்றிக் கூறப்பட்டுள்ளது. எனவே இக்குறள் பிறப்பின் தன்மையைப் பற்றிக் கூறும் நோக்கம் கொண்டது அன்று என்பதை உணர்தல் வேண்டும். 'பிறப்பு ஒக்கும்' என்பதற்கு பரிமேலழகரும் மு.வ வும் கூறும் பொருள் 'பிறத்தல் ஒக்கும்' என்பதே. இங்கு 'பிறப்பு' என்பது 'பிறத்தல்' என்ற பொருள் கொண்ட தொழிற்பெயராகும். அதாவது தாயின் வயிற்றில் கருவாகி பத்து மாதம் வளர்ந்து தாயின் வயிற்றில் இருந்து பிறத்தல் முதலிய பிறக்கும் முறை எல்லா உயிர்களுக்கும் ஒத்த தன்மை உடையது என்பது இதன் பொருள். 'எல்லோருக்கும் பிறக்கும் முறை ஒன்றுதான். ஆனால் அவரவர் செய்யும் தொழிலுக்கு ஏற்ப அவரவர்க்கும் சிறப்பு மாறுபடும்' என்பது இக்குறளின் கருத்து. ஆனால் தற்காலத்தில், 'எல்லா உயிர்க்கும் பிறப்பின்கண் தன்மைகள் ஒக்கும்' என்று பொருள் கொள்கிறார்கள். அதாவது 'பிறப்பு' என்பதை நிகழ்வின் பெயராகவும் அது ஏழாம் வேற்றுமைத் தொகையாய் வருவதாகவும் 'தன்மைகள்' என்ற எச்சம் அங்கு இருப்பதாகவும் கொள்கின்றனர். ஆனால் இந்தப் பொருள் - அதாவது எல்லாக் குழந்தைகளும் பிறக்கும்போது ஒரே தன்மையுடன் இருக்கும் எனற பொருள் - மேலே காட்டப்பட்ட குறள்களில் உள்ள வள்ளுவரின் கருத்துக்கு முற்றிலும் முரணானது என்பதால் இவ்வாறு பொருள் கொள்ள முடியாது. எனவே 'பிறப்பு ஒக்கும்' என்பதற்கு 'பிறத்தல் ஒக்கும்' என்பதே இங்கு பொருள் என்றும் அது பிறக்கின்ற முறையைக் குறித்ததே தவிர பிறக்கும்போது குழந்தைகளுக்கு இருக்கக் கூடிய தன்மைகளைக் குறிக்கவில்லை என்றும் தெளிவாக அறியலாம்.

## பிறப்பின்படி ஏற்றத் தாழ்வு - ஒரு வரலாற்றுப் பார்வை

பிறப்பின்போது எல்லாக் குழந்தைகளும் உயர்வு, தாழ்வு அற்றவை என்ற கருத்து தற்காலத்தில் இவ்வளவு வலுவாகக் கூறப்படுவதன் பின்னணி கருதத் தக்கது. இந்து மத சமுதாயத்தில் உள்ள நால்வருண முறை மனிதர்களுக்குள் உயர்வு தாழ்வைக் கற்பிக்கிறது என்றும் அதைக் கூறும் மனுதர்ம நூலே இத்தகைய உயர்வு தாழ்வுக்குக் காரணம் என்றும் ஒரு கருத்து ஏறத்தாழ 150 ஆண்டுகளாக நம் நாட்டில் பலரால் கூறப்பட்டு வருகிறது. உண்மையில் உயர்வு, தாழ்வு இல்லாத இடம் உலகில் எங்கும் எப்போதும் இல்லை. எந்த ஒன்றிலும் ஏதோ ஒரு வகையில் உயர்வு, தாழ்வு ஏற்படுதல் உலக இயற்கை. பிற மத நூல்களிலும் இவ்வாறான உயர்வு, தாழ்வு உண்டு; அது பிறப்பின் அடிப்படையில் அமைவதும் உண்டு. பிற மதங்களிலும் இந்து மதத்திலும் பழங்கால நிலை வேறு, தற்கால நிலை வேறு. நால்வருண முறையின் நிலை மனுநூல் காலத்தில் இருந்து இன்றுவரை ஒரே மாதிரி மாற்றமின்றி இருக்கவில்லை. சமுதாய நடைமுறைகள் சமுதாயச் சூழ்நிலைகளைக் கொண்டே உருவாகின்றன. சமுதாயச் சூழ்நிலைகள் மாறும்போது சமுதாய நடைமுறைகளும் மாறுகின்றன. நால்வருணம் என்பது அக்காலச் சமுதாயத்தில் தொழிலை அடிப்படையாகக் கொண்டு உருவாகியிருந்த பெரும் பிரிவுகள். மனுநூல் என்பது அக்காலச் சூழ்நிலைக்கேற்ப அக்கால நடைமுறைகளை வகுத்த ஒரு நூல். பிராமணர், சத்திரியர், வைசியர், சூத்திரர் ஆகிய நான்கு வருணப் பிரிவுகளில் சூத்திரரின் நிலையைத் தாழ்வாக ஆக்கக் கூடிய சில கருத்துகள் மனு நூலில் உள்ளன என்பது உண்மை. அவை அக்காலத்துக்குரிய கருத்துகள். ஆனால் சூத்திரர் நிலை இராமாயண காலத்துக்கு முன்பே உயர்ந்துவிட்டது. அதன்பின் தொழில் அடிப்படையிலான உயர்வு, தாழ்வு மட்டுமிருந்ததே தவிர வேறு தாழ்வான நிலை சூத்திரருக்கு இல்லை. சமுதாயத்தின் நான்கு அங்கமாக நால்வருணத்தினர் இருந்தனர். தமிழகத்தில் சூத்திரர் எனப்படும் வேளாளர் அக்காலத்திலும், இக்காலத்திலும் மதிப்புடனே வாழ்ந்துவருகின்றனர். இதைப் பற்றியும் இக்கட்டுரை ஆசிரியர் எழுதிய, 'சங்ககாலத் தமிழரின் சமயம் - ஒரு மீளாய்வு' என்ற கட்டுரையில் 'தொல்காப்பியத்தில் வைதிகம்' என்ற தலைப்பில் விளக்கப்பட்டுள்ளது3. தற்காலத்தில் பலரும் பல தொழில்களையும் செய்கின்றனர். தற்காலத்தில் யாரையும் சத்திரியர் என்றோ வைசியர் என்றோ சூத்திரர் என்றோ கூறுதல் கடினம். எனவே நால்வருண முறை தற்காலத்தில் மறைந்துவிட்டது எனலாம். சாதி முறையே தற்காலத்தில் உள்ளது. செய்யும் தொழிலின் அடிப்படையில் காலப் போக்கில் சாதி என்பது ஏற்பட்டது. இது ஒவ்வொரு தொழிலுக்கும் உரியது. எனவே பரந்த பிரிவான வருணத்துக்கு இது வேறுபட்டது. பழங்காலத்தில் தந்தை செய்யும் தொழிலை மகன் செய்வது வழக்கமாக இருந்தது. அதற்கு அக்காலச் சூழ்நிலையே காரணம். தற்காலத்தைப் போலப் பயிற்சிப் பள்ளிகளும் பிற நவீன வசதிகளும் அக்காலத்தில் இல்லை. தந்தையுடன் கூடவே இருந்து தொழிலைக் கற்றுக் கொள்வதால் அவர்களிடம் குன்றாத தொழில் செம்மை இருந்தது. எனவே இது விரும்பப்பட்டது. இவ்வாறு பிறப்பின் அடிப்படையிலான தொழில் வகைச் சாதிகள் தோன்றின. இதற்கும் மதத்துக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. மதிப்பான தொழில் செய்வோரின் சாதிகள் உயர்வாகவும், தாழ்வான பணிகளைச் செய்வோரின் சாதிகள் தாழ்வாகவும் கருதப்பட்டன. சிறந்த அரசுகள் இல்லாமல் நமது நாடும் சமுதாயமும் சீர்கேடு அடைந்து குன்றியிருந்த காலங்களில் தாழ்வான சாதியினரை உயர்வான சாதியினர் இழிவாக நடத்துவது மிகவும் மிகுந்தது. மக்களின் பரந்த நோக்கமும் உயர் தன்மைகளும் குன்றி,

"அகப்பட்டி ஆவாரைக் காணின் அவரின்
மிகப்பட்டுச் செம்மாக்கும் கீழ்" (குறள். 1074)

என்ற குறளில் கூறப்படும் கீழ்மைத் தன்மை சமுதாயத்தில் உயர்சாதி மக்களிடம் மிகுந்தது.

20ஆம் நூற்றாண்டில் நம் நாட்டில் சீர்திருத்தச் சிந்தனைகள் பெருகின. சமத்துவம், சகோதரத்துவம் என்ற உயர்ந்த சிந்தனைகள் ஓங்கின. இதனால் தற்காலத்தில் சாதி ஏற்றத் தாழ்வுகள் பெரிதும் குறைந்துள்ளன. தற்காலத்தில் தந்தை செய்த தொழிலை மகன் செய்ய வேண்டும் என்பதில்லை. எனவே தற்காலச் சூழ்நிலை பெரிதும் மாறியுள்ளது. உடலுக்கு எல்லா உறுப்புகளும் தேவையாதல் போல எல்லாத் தொழிலும் சமுதாயத்திற்கு தேவையானவை. ஒரு பிரிவினர் தாழ்ந்து போனால், சமுதாயம் அழுகிப் போன ஒரு உறுப்பைக் கொண்டுள்ள உடல் போலாகிவிடும். கொலை, திருட்டு, பொய் முதலிய செயல்களே இழிவானவை. எல்லாத் தொழில்களும் சமுதாயத்துக்குத் தேவையானவை என்பதால் அவை அனைத்தும் தன்னளவில் சிறந்தனவே. எனவே எந்தத் தொழிலையும் இழிவாகக் கருதுதல் தகாது. எல்லாப் பிரிவினருக்கும் உரிய மதிப்பு தந்து எல்லோரையும் உரிய உரிமைகளுடன் வாழச் செய்யும் சமுதாயமே சிறந்த சமுதாயம். இத்தகைய கருத்துகள் 20 ஆம் நூற்றாண்டில் வளர்ந்ததால் பிறப்பின் அடிப்படையில் உயர்வு தாழ்வு கருதக் கூடாது என்ற கருத்து மிகவும் செல்வாக்கு பெற்றது. எனவே பலரும் 'பிறப்பொக்கும்' என்ற குறள் பிறப்பில் உயர்வு தாழ்வு இல்லை என்று கூறுகிறது எனக் கூறத் தொடங்கினர். இச்சூழ்நிலையில் சிலர் ஆரியமும் தமிழும் பகையானவை என்ற பரப்புரைக்கு இக்குறளைப் பயன்படுத்திக் கொண்டனர். மேலும் சிலர் இந்து மதத்திற்கு எதிரான ஒரு கருவியாக இக்குறளைப் பயன்படுத்திக் கொண்டனர். இதனால் 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்பது ஒரு முழக்கமாகவே மாறியது.

## முடிவுரை

பிறப்பின் அடிப்படையில் ஒருவரைத் தாழ்வாகக் கூறக் கூடாது என்ற நல்ல நோக்கத்திலேயே இக்குறளின் கருத்து இவ்வாறு கூறப்பட்டு வருகிறது என்பது தெளிவு. எனினும் திருக்குறளுக்கு தவறான பொருள் கூறுவது திருவள்ளுவருக்குச் செய்யும் அநீதியாகும். சமுதாயச் சீர்திருத்தம் தேவையான ஒன்று என்பதில் மாற்றுக் கருத்து இருக்க முடியாது. யாரையும் தாழ்வாக ஆக்காமல் எல்லோரையும் உயர்த்துவது நல்ல சமுதாயத்தின் கடமை என்பதும் அனைவரும் ஏற்கக்கூடியது. அதற்காக திருக்குறளின் கருத்தைத் திரித்துக் கூறுவது ஏற்புடையதல்ல. தற்கால நிலைமை பழங்கால நிலைமைக்கு முற்றிலும் மாறாக மாறிவிட்டதால் இக்காலக் கருத்துகளுக்கு ஏற்பவும் நம் விருப்பத்துக்கு ஏற்பவும் பழங்கால வரலாற்றைத் திரித்து நாம் பொய் வரலாற்றைக் கூறினால் அது நம்மை நாமே ஏமாற்றிக் கொள்வது ஆகும்.

## References


தட்சணாமூர்த்தி, ந. (2025) சங்ககாலத் தமிழரின் சமயம் - ஒரு மீளாய்வு - முத்தரசி இணைய ஆய்விதழ்க் கட்டுரை. https://zenodo.org/records/17093296

தண்டபாணி தேசிகர், ச., (2003) திருக்குறள் உரைக் களஞ்சியம் பொருட்பால் - ஒழிபியல், மதுரைக் காமராசர் பல்கலைக் கழகம், மதுரை.

துரைசாமிப் பிள்ளை, ஔ.சு., (1947) புறநானூறு உரை - பகுதி 1, தி.தெ.சை. நூ.கழகம், சென்னை.

வரதராசனார், மு. (1994) திருக்குறள் தெளிவுரை, தி.தெ. சை. நூ. கழகம், சென்னை



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.



**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2026. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License